DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | அன்பழகன் |
| Father's Name | ஏகாம்பரம் |
| Village | பெரியபேட்டை |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | |
| Age | 71 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of
**03.02.2026.**

**O.S. No. 73 /2022** **வா.சா.1** **11.59 AM – 12.21 PM**

**குறுக்கு விசாரணை –**

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் தற்போது தொழில் எதுவும் செய்யவில்லை. நான் கடந்த எத்தனை வருடமாக தொழில் எதுவும் செய்யாமல் இருக்கிறேன் என்றால் கடந்த 2022 ம் ஆண்டு முதல். அதற்கு முன்பு நான் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் தோள் நிறுவனம் நடத்தி வந்தேன்.

2. வழக்கின் பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் நான் வைத்திருந்த தொழிற்சாலைக்கு அவர் தோல் வாங்கி வந்து அதில் மிஷினரி வர்க் செய்து வந்தார். வழக்கின் பிரதிவாதி எனக்கு 10 வருடங்களாக தெரியும். என்னிடம் பணம் வேண்டும் என்று எந்த இடத்தில் வைத்து கேட்டார் என்றால் என்னுடைய கம்பெனியில் வைத்து தான் கேட்டார்.

3. நான் பணம் கொடுப்பதற்கு எத்தனை நாள் முன்பு பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார் என்றால் சுமார் 15 நாட்கள் இருக்கும். நான் மேற்படி பணத்தை எந்த இடத்தில் வைத்து கொடுத்தேன் என்றால் என்னுடைய கம்பெனியில் வைத்து தான் கொடுத்தேன். நான் பிரதிவாதியிடம் பணத்தை எந்த முறையில் கொடுத்தேன் என்றால் பண நோட்டுகளாக கொடுத்தேன். எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் தேதி நினைவில்லை ஜனவரி மாதம் 2020 ஆம் வருடம் இருக்கும்.

4. பதிவாதிகளிடம் இருந்து பெறப்பட்ட பாண்டு எந்த தேதியில் நிரப்பப்பட்டது என்றால் பணம் கொடுத்த அந்த தேதியிலேயே நிரப்பப்பட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 தான் அந்த பாண்டு என்றால் சரிதான். அதில் என்னுடைய விவரங்கள் தமிழிலும் பிரதிவாதியின் விவரங்கள் ஆங்கிலத்திலும் இருக்கிறது என்றால் சரிதான். என்னுடைய விவரங்கள் பின்னிட்டு தான் என்னால் நிரப்பப்பட்டது. அதில் இடப்பட்டுள்ள சாட்சி கையெழுத்து யாருடையது என்றால் பிரதிவாதி அழைத்து வந்தார் அதுவும் என்னுடைய கம்பெனியில் வைத்து தான் போடப்பட்டது. மேற்கண்ட

விவரத்தை என்னுடைய வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

5. மேற்படி சாட்சியை பிரதிவாதி அழைத்து வரவில்லை என்றாலும், நான் தான் அழைத்து வந்து சாட்சி கையொப்பம் செய்ய வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியிடம் பலமுறை பணத்தை கொடுக்கும்படி எந்தெந்த தேதிகளில் கேட்டேன் என்றால் நினைவில்லை. நான் பிரதிவாதியிடம் பணம் திரும்ப கொடுக்கும்படி கேட்கவில்லை என்றாலும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு வழக்கறிஞர் முன் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதி தரப்பில் கொடுக்கப்பட்ட பதில் அறிவிப்பை நான் படித்து தெரிந்து கொண்டேன் என்றால் தெரிந்துக்கொண்டேன்.

6. வழக்கின் பிரதிவாதிக்கு 5 லட்சம் மதிப்புள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்களுக்கான விவரங்களை வழக்குரையில் தெரிவித்துள்ளன என்றால் வீடு இருப்பதாக கூறி பணம் கேட்டார் அவ்வளவு தான் தெரியும். மேற்படி சொத்துக்களுக்கு உண்டான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் வட்டி விவரம் நான் தான் குறிப்பிட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வருடத்திற்கு ரூ.75,000/– வருமானம் வருகிறது என நான் கூறியதற்கு ஆதரவாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. பிரதிவாதி தற்போது தோல் தொழிற்சாலை எதிலும் வேலை செய்யாததாலும் வறுமை நிலையில் இருக்கும் விவரம் தெரிந்தே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு நீண்ட நாள் தெரிந்த நபர் என்பதாலும் அவருடைய கையொப்பம் எப்படி இருக்கும் எனக்கு தெரிந்திருக்கும் என்பதை வைத்து போலியாக அவருடைய கையெழுத்தை நானே வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி
வாணியம்பாடி.